முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1151

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.11.2022, புதன்கிழமை

1. அறமெனும் வேலிகொண்ட ஆறுமுக ஞானியே
அரங்கனே எந்தன் அவதாரமே
வரம் தந்து சுப்ரமணியர் யானும் உமக்கு
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சுபகிருது தேள் திங்களில் உரைப்பேன்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 07 ம் நாள் 23.11.2022, புதன்கிழமை)
அரங்கன் சக்தி மேலும் மேலும் பரவவேண்டி
வேண்டியே அரங்கன் தொடர்பு கூட்டி வையகத்தில் உலகோர் தொடர்ந்து வர
அரங்கனின் சக்திமூலம் வரும் அன்பர்களெல்லாம் அகிலத்தில் ஞானிகளாக மாற்றம் பெறுவர்
3. மாற்றம் தருகின்ற மகா சக்தியாகவும்
மக்களை எல்லாம் காக்கின்ற மாதவசியாகவும்
ஆற்றல் பட அரங்கனை யான் இயக்க அரங்கன் வழி
ஆறுமுகன் என்னை கண்டு உலகமக்கள் அழியாமை பெற்று உயர நேரும்
4. நேர்மைகொண்ட அரங்கன் தர்மத்தில்
நிலவுலகோர் பொருளுதவி செய்து கொண்டு
வறுமையை வெல்லுகின்ற மாதர்மத்தை
வளர்த்துவந்தால் போதும் வையகமே தர்மஞான லோகமாகி
5. ஆகியே கலியுகம் தானும்
ஆற்றல்பட ஞானயுகமாக மாற்றம் கண்டு
அழியாமை பெற்ற உயர் மாந்தர்கள் வழி
ஆறுமுகனார் என் ஞான ஆட்சி உதயமாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–